www.tamilarangam.net

# ஜனாதிபதி தேர்தலில்

# பிரதமர் சந்திரிகாவை

# ஆதரிப்போம் !

அன்பார்ந்த வாக்காளர்களே,

இனப்பிரச்சனைக்கு சமாதான ரீதியானதும் நீதியானதுமான அரசியல் தீர்வொன்று காணப்பட வேண்டும் என்றும் இதற்காக நிபந்தனையற்ற அரசியல் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டும் என்றும் அண்மைய பாராளுமன்றத் தேர்தலின்போது தமிழர் விடுதலைக் கூட்டணி அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கோரியிருந்தது. வடக்கு-கிழக்கு உள்நாட்டுப்போரை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் புலிகள் இயக்கத்துடன் அரசியல் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கும் அவ்வியக்கத்துடன் நேரடி அரசியல் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் பிரதமர் சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் குறிப்பிட்ட சில சாதகமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

அரசியலமைப்புச் சீர்திருத்தங்களைச் செய்வதற்காகவும் தேவையானால் தற்போதைய அரசியலமைப்பை மாற்றுவதற்குமான வழிவகைகளை ஆராய பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றும் அமைக்கப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்டிருக்கிறது. தேசிய இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண்பதற்கு அத்தியாவசியமான ஆக்கபூர்வமான அதிகாரப்பரவலுக்கான ஏற்பாடுகள், அத்தகைய அதிகாரப்பரவலாக்கலை எத்தகைய பிராந்திய அலகில் மேற்கொள்வதென்பதை ஆராயும் ஏற்பாடுகள் உட்பட பல்வேறுபட்ட அடிப்படை விவகாரங்களை இத்தெரிவுக் குழு கவனத்தில் எடுத்துப் பரிசீலிக்கும், இக்குழு அதன் பணிகளை 1995 ஜூன் மாதத்திற்கு முன்னதாகப் பூர்த்திசெய்ய வேண்டும் என்று உறுதி பூணப்பட்டுள்ளது.

இந்த முன்முயற்சிகள் எல்லாமே தற்போதுதான் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்ற போதிலும் எமது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறித்துரைக்கப்பட்ட அரசியல் இலக்குகளுடன் ஒத்திசைவாக இருக்கின்றதனால் அவற்றுக்கு ஆதரவளிக்க வேண்டியது அவசியமாகும். இச்சமாதான முன்முயற்சிகளை வெகு அக்கறையுடன் தொடர்ந்து முன்னெடுக்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிறைவேற்றுக்குழு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை வலியுறுத்துகின்ற அதேவேளை, முன்முயற்சிகளுக்கு வலுச்சேர்ப்பதற்காக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளரான பிரதமர் சந்திரிகாவை ஆதரிக்கவும் தீர்மானித்திருக்கிறது.

ஆகவே உங்கள் பொன்னான வாக்குகளை பிரதமர் சந்திரிகாவுக்கே கதிரைச் சின்னத்திற்கு நேராகப் புள்ளடியிட்டு அதிகப்படியான வாக்குகளால் அவரை வெற்றியடையச் செய்வோம்.

**தமிழர் விடுதலைக் கூட்டணி**

---

இப்பிரசுரம் தமிழர் விடுதலைக் கூட்டணி கொழும்புக் கிளையினரால் 201, டாம் வீதி, குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

(பொது இடங்களில் ஒட்டக்கூடாது.)